# வாக்குமூலம்

## தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

## வழக்கு எண். SC.No.142/2021

## வழக்கு சாட்சி – PW– 4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திருமதி. திலகா | ஜாதி | :: |
| தந்தை பெயர் | :: | தொழில் | :: |
| கிராமம் | :: | சமயம் | :: |
| தாலுகா | :: | வயது | :: |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 12.02.2024.

(எதிரிகள் 1, 3 ஆஜர்)

(2ம் எதிரிக்கு எதிராக நீண்ட நாட்களாக பிடிகட்டளை நிலுவையில் இருந்த நிலையில் ஜாமின்தாரர்கள் நடவடிக்கை கு.வி.மு.ச 446ன்கீழ் எடுக்கப்பட்டு பிணைமுறி பறிமுதல் செய்யப்பட்டு 2ம் எதிரிக்கு எதிரான வழக்கு தனியாக பிரித்தெடுக்கப்பட்டது. கு.வி.மு.ச 82 பிரிவின் கீழான நடவடிக்கைக்காக நிலுவையில் இருந்த நிலையில் Parent Case S.C.No.142/2021 வழக்கின் சாட்சிய விசாரணை எடுக்கப்பட்ட நிலையில் தலைமறைவு 2ம் எதிரிக்கு எதிரான S.C.No.80/2023 வழக்கிலும் கு.வி.மு.ச 299ன் கீழ் சாட்சிகளின் விசாரணை பதிவு செய்யப்பட்டது. )

---

முதல்விசாரணை

நான் தற்போது மண்டபத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் 1, 3 எதிரிகளை தெரியும். எதிரி துரையையும் தெரியும். அ.சா.1 மோகன்ராஜ் எனது மச்சான். பத்திரகாளி எனக்கு அக்கா உறவுமுறை. அ.சா.3 சாந்தி எனக்கு அக்கா உறவு முறை. கௌசல்யாவிற்கும் எங்கள் குடும்பத்திற்கும் சொத்து பிரச்சனை இருந்தது. எனது மாமியார் இறந்த பிறகு கௌசல்யா சொத்து கேட்டு பிரச்சனை செய்து வந்தார். கடந்த 29.03.2021 ஆம் தேதி

நாங்கள் வாடகைக்கு விட்டுள்ள காம்பௌவுன்டிற்கு வந்து குடியிருப்பவர்களை காலி செய்யுமாறு சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். கௌசல்யா, அவரது மகன் துரை, சண்முகவேல் ஆகியோர் வந்தார்கள். துரை பெரிய அருவாள் வைத்திருந்தார். சண்முகவேல் வாள் வைத்திருந்தார். எனது மச்சான் மோகன் ராஜ் உடன் சொத்து கேட்டு சண்டை போட்டார்கள். அசிங்கமாக பேசினார்கள். அங்கு இருப்பவர்களை காலி செய்ய சொன்னார்கள். குடியிருப்பவர்கள் நாங்கள் காலி செய்துவிடுகிறோம் என்றும் ஆனால் இவர்கள் அசிங்கமாக பேசுகிறார்களே என்று சொன்னார்கள். அ.சா.1 நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒம்/கே. கவிதா
தலைமை குற்றவியல் நடுவர்
இராமநாதபுரம்.

வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண். SC.No.142/2021

வழக்கு சாட்சி – PW– 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திருமதி. சாந்தி | ஜாதி | :: |
| தந்தை பெயர் | :: | தொழில் | :: |
| கிராமம் | :: | சமயம் | :: |
| தாலுகா | :: | வயது | :: |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 12.02.2024.

(எதிரிகள் 1, 3 ஆஜர்)

(2ம் எதிரிக்கு எதிராக நீண்ட நாட்களாக பிடிகட்டளை நிலுவையில் இருந்த நிலையில் ஜாமின்தாரர்கள் நடவடிக்கை கு.வி.மு.ச 446ன்கீழ் எடுக்கப்பட்டு பிணைமுறி பறிமுதல் செய்யப்பட்டு 2ம் எதிரிக்கு எதிரான வழக்கு தனியாக பிரித்தெடுக்கப்பட்டது. கு.வி.மு.ச 82 பிரிவின் கீழான நடவடிக்கைக்காக நிலுவையில் இருந்த நிலையில் Parent Case S.C.No.142/2021 வழக்கின் சாட்சிய விசாரணை எடுக்கப்பட்ட நிலையில் தலைமறைவு 2ம் எதிரிக்கு எதிரான S.C.No.80/2023 வழக்கிலும் கு.வி.மு.ச 299ன் கீழ் சாட்சிகளின் விசாரணை பதிவு செய்யப்பட்டது. )

முதல் விசாரணை

நான் தற்போது மண்டபத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் அ.சா. 1, 2 ஐ தெரியும். ஆஜர் 1, 3 எதிரிகளை தெரியும். எதிரி துரையையும் தெரியும். அ.சா.1 மோகன்ராஜ் எனது கொழுந்தன். கௌசல்யா எனது கணவரின் தங்கை. எங்கள் குடும்பத்திற்கும் கௌசல்யா குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. கடந்த 29.03.2021 ஆம் தேதி நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு பக்கத்தில் கௌசல்யா மற்றும் அவரது

மகன் துரை, சண்முகவேல் ஆகியோர் வந்து சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள். என் கொழுந்தன் வீட்டிற்கு முன்பாக வந்து வீட்டை காலி செய்யுமாறு சொல்லிக் கொண்டிருந்தார்கள். வெட்டி விடுவேன், குத்தி விடுவேன் என்று சத்தம் போட்டுக்கொண்டிருந்ததை கேட்டு காம்பௌவுன்டிற்குள் குடியிருந்தவர்கள் வீட்டிற்குள் சென்று விட்டார்கள். நான் வெளியில் நின்று கொண்டிருந்தேன். கோர்ட்டிற்கு போய் பார்த்துக்கொள்ளுமாறு நாங்கள் சொன்னோம். அவர் கையில் ஆயுதங்கள் வைத்திருந்ததால் பயந்துகொண்டு நாங்கள் சென்றுவிட்டோம். என் கொழுந்தன் அ.சா.1 னும் வீட்டிற்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டார். எதிரிகள் வெளியே வா என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். இது சம்பந்தமாக என் கொழுந்தன் அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒம்/கே. கவிதா
தலைமை குற்றவியல் நடுவர்
இராமநாதபுரம்.